விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 096 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை (25.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நல்லூர் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அர்ச்சுனா - ரஜீவன் நக்கல் நையாண்டி

### நேரத்தை வீண்விரயம் செய்ததால் ஆத்திரமடைந்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் ஆகியோர் ஒருவருக்கொருவர் அரசியல் ரீதியான நக்கல் நையாண்டிகள் செய்து நேரத்தை வீண்விரயம் செய்ததால் கூட்டத்தில் பங்கேற்ற பல பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்

15ஆம் பக்கம் பார்க்க

### நெல்லியடியில் பொலிஸார் அராஜகம்

## வீடு புகுந்து பெண்கள் மீது காலால் உதைந்தனர்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் வீடு புகுந்து பெண்கள் மீது காலால் உதைந்து பொலிஸார் அராஜகம் புரிந்துள்ளனர்.

சந்தேக நபர் ஒருவரை தேடிச் சென்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான காணொளி சமூக ஊடகங்களில் நேற்று வெளியாகியுள்ள நிலையில் பலர் தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். (ம-7)

### யாழ்ப்பாண மாவட்ட

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று காலை 9 மணியளவில் மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் ஒருங்கிணைப்புக்கூட்டம் இடம்பெறவுள்ளது. (ம-7)

# அரசியல் கைதிகளின் விடுதலை உடனடிச் சாத்தியமில்லை

### விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வது சாத்தியமில்லை. அதற்குரிய விதிமுறைகளை நாங்கள் பின்பற்ற வேண்டும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார், பூநகரி சபைகளுக்கான

### வேட்புமனு ஆரம்பம்

(கிளிநொச்சி)

மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் நாளை மறுதினம்

15ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா தேக்கவத்தையில்

## இராணுவம், பொலிஸ் திடீர் சுற்றிவளைப்பு

(வவுனியா)

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்ட நபர்களைக் கைது செய்தல் மற்றும் போதைப்பொருளை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த விசேட தேடுதல் நட

15ஆம் பக்கம் பார்க்க

## ஆட்டோ மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### நாவற்குழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ மோதியதில் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் நாவற்குழி புதிய குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான அந்தோணி றில்மன் டெனிஸ் (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நாவற்குழி

15ஆம் பக்கம் பார்க்க

### மன்னாரில்

## சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(மன்னார்)

மன்னாரில் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.10.1957

மறைவு 23.03.2025

(C-2528)

S.V.M((PVT) LTD கொழும்பு கிளையின் முகாமையாளர்
நடேசலிங்கம் ஜெயக்குமாரின் அன்புத் தாயார்

## திருமதி பரமேஸ்வரி நடேசலிங்கம்

அவர்கள் 23.03.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**S.V.MURUGESU**

IMPORTERS, GENERAL MERCHANTS & CONSIGNMENT AGENT
NO. 154, HOSPITAL ROAD, JAFFNA.
svmmurugasugunaratnam@yahoo.com
TEL: 021-4925831/021-2228899
FAX: 021-2228899

**S.V.M.(PVT) LTD**

NO. 122, DAM STREET, COLOMBO-12.
TEL: 011-4378678
011-2424392
FAX: 011-2424391
svm-sugar@hotmail.com

S.V.M Fuel Mart
No.173, 175, Palaly Road,
Thirunelvely.

S.V.M Rice Mill
Power House Road,
Chunnakam.

**உரிமையாளரும் ஊழியர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர்தல் பிரசாரத்தின் போது

# பணம் வழங்கினால் பதவி பறிபோகும்!

## பப்ரல் எச்சரிக்கை

PAFFREL

(கொழும்பு)

**தேர்தலில் வெற்றிபெற்று உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகத் தெரிவான ஒருவர், பிரசாரத்தின்போது பொதுமக்களுக்குப் பணம் வழங்கியுள்ளமை உறுதிப்படுத்தப் படுமாயின் அவர் தமது பதவியை இழக்க நேரிடும் எனவும் பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தைப் பின்பற்றி தேர்தல் பிரசார பணிகளில் ஈடுபட வேண்டியது சகல வேட்பாளர்களினதும் பொறுப்பாகும்.

எனவே, தங்களது பிரதேசங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தாம் தகுதியானவர் என வேட்பாளர் நிரூபிக்க வேண்டும்.

அத்துடன், ஊழல் இன்றி பொதுச் சொத்துக்கள் தொடர்பில் பொறுப்புடன் செயற்படக் கூடியவர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்தலுக்காக கையூட்டல் வழங்கும் வேட்பாளர் ஒருவர், தேர்தல்களில் வெற்றி பெற்றதன் பின்னர் அந்தப் பணத்தை வசூலிப்பதற்காக செயற்படுவார் என்ற விம்பத்தை மக்களிடையே தோற்றுவிக்கும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## தேர்தல் தொடர்பில் 6 முறைப்பாடுகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய 6 முறைப்பாடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமக்கு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் விதிகளை மீறியது தொடர்பில் இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதில் தேர்தல் வன்முறை தொடர்பான எந்த முறைப்பாடும் பதிவாகவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளையில் மூன்று முறைப்பாடுகளும் கெபிதிகொல்லாவ, மொனராகலை மற்றும் பொனறுவையில் இருந்து மூன்று முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 2025 மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கல்வியறிவின்மையால் மோசடிக்குள்ளாகும் மக்கள்

## மத்திய வங்கி ஆளுநர் கவலை



(கொழும்பு)

மக்களிடையே நிதிக் கல்வியறிவு போதுமானதாக இல்லாததன் காரணமாக, அவர்கள் நிகழ்நிலை மோசடிக்கு ஆளாகும் நிலைமை அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் டிஜிற்றல் கொடுப்பனவுகள் ஊக்குவிப்பு பிரசாரத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கும் புதிய தொழில்நுட்ப சேவைகள் குறித்து பொதுமக்களை விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நிதி கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளின் போது தாள்கள், நாணயத்தினை எடுத்துச் செல்வதை விட டிஜிற்றல் முறைமையினைப் பயன்படுத்துவது இலகுவானதாகும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# புத்தகப் பையினால் மாணவர்களுக்கு ஆபத்து

## சிறப்பு மருத்துவர் விடுத்த கோரிக்கை



(கொழும்பு)

பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லும் புத்தகப் பைகளின் எடை அதிகரிப்பால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல உடல்நலப் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து அவ்வப்போது விவாதங்கள் நடத்தப்பட்டாலும், சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் இதுவரை எவ்வித உரிய தீர்வினையும் காணவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

புத்தகப் பைகளின் எடை அதிகரிப்புக் காரணமாக, பாடசாலை மாணவர்களிடையே முதுகுத் தண்டுப் பிரச்சினை, சமநிலைப் பிரச்சினை, தலைவலி மற்றும் கழுத்து வலி உள்ளிட்ட பிரச்சினைகள், நரம்பு தொடர்பான கோளாறுகள் உள்ளிட்டவை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில், குறித்த பிரச்சினை தொடர்பில் விரைவில் உரிய தீர்வினை எடுக்க வேண்டும் என்றும், தரப்படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழ் பாடசாலை புத்தகப் பையொன்றை வடிவமைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ஒரு நாளைக்கு பாடசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ கேட்டுக் கொண்டுள்ளார். (நி-8)

# தென்னை செய்கையாளர்களுக்கு உரமானியம்- வெளியானது அறிவிப்பு

(கொழும்பு)

தென்னைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உர மானியங்கள் இந்த மாத இறுதி முதல் வழங்கப்படும் எனப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

இதற்காக ரூ.5,600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஐந்து ஏக்கருக்கும் குறைவான தென்னை விவசாயிகளுக்கு உரமானியம் வழங்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உரமானியங்களை வழங்குவதற்காக அரசாங்கத்திடம் 56,700 மெற்றிக் தொன் உரம் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டில்லிக்கு ‘கில்லி’ அசுதோஷ்

## சளைக்காமல் போராடி வெற்றியைத் தந்தார்

## இறுதியில் ஏமாந்தது லக்னோ அணி



இறுதிவரை சளைக்காமல் போராடிய அசுதோஷ் சர்மாவின் துடுப்பாட்டத்தினால் டில்லி அணி 3 பந்துகள் மீதமிருக்கையில் ஒரு விக்கெட்டால் திரில் வெற்றி பெற்றது.

பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று விசாகப் பட்டினத்தில் நடந்த ஆட்டத்தில் டில்லி - லக்னோ அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லியின் அணித் தலைவர் அக்சர் பட்டேல் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இதையடுத்து முதல் விக்கெட்டுக்காக மார்க்ரம் - மிட்செல் மார்ஷ் ஜோடி சேர்ந்தனர். இருவரும் அதிரடியாக ஆட்டத்தைத் தொடங்கி டில்லி பந்துவீச்சை எளிதாக எதிர்கொண்டனர்.

சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்திய இந்த ஜோடியை விப்ராஜ் நிகாம் பிரித்தார். 15 ஓட்டங்கள் எடுத்திருந்த மார்க்ரம், நிகாம் பந்தில் ஸ்ரார்க்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அதன் பின்னர் மார்ஷுடன் நிக்கோலஸ் பூரன் கைகோர்த்தார். இந்த ஜோடி டில்லி பந்துவீச்சை எளிதாக எதிர்கொண்டு விளாசியது. பந்துகளை பவிலியன் பக்கம் விளாசிய இருவரும் விரைவாக ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தனர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 133ஐ எட்டியபோது, 36 பந்துகளில் 72 ஓட்டங்கள் குவித்திருந்த மார்ஷ், முகேஷ் குமார் பந்தில் வீழ்ந்தார். அவரைத் தொடர்ந்து அடுத்த சில ஓவர்களிலேயே 75 ஓட்டங்கள் குவித்திருந்த பூரன் ஸ்ரார்க் பந்தில் க்ளீன் போல்டானார்.

அதன் பின்னர் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரிஷப் பண்ட் ஏமாற்றம் அளித்தார். 6 பந்துகளை எதிர்கொண்ட அவர் ஓட்டம் ஏதும் எடுக்காமல் குல்தீப் யாதவ் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

ஒருகட்டத்தில் வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்திய லக்னோ, அடுத்தடுத்து விக்கெட்டுகள் இழந்து தடுமாறியது. 5ஆவது விக்கெட்டுக்கு கைகோர்த்த டேவிட் மில்லர், ஆயுஷ் படோனி இருவரும் சோபிக்கவில்லை. படோனி 4 ஓட்டங்கள் எடுத்து திருப்தி அடைந்தவராக வெளியேறினார்

அவரைத் தொடர்ந்து ஷர்துல் தாகூர் ஓட்டம் ஏதும் எடுக்காமல் விக்கெட்டை பறிகொடுத்து ஏமாற்றமளித்தார். டேவிட் மில்லரும், ஷாபாஸ் அகமட்டும் ஓட்டக்குவிப்பில் ஈடுபட முனைந்தனர். 8 பந்துகளில் 9 ஓட்டங்கள் எடுத்த ஷாபாஸ் அகமட், ஸ்ரார்க் பந்தில் வீழ்ந்தார்.

ஆட்டத்தின் முதல் 10 ஓவர்களில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய லக்னோ, அடுத்த 10 ஓவர்களில் பெரிதாக சோபிக்கவில்லை. இருப்பினும் கடைசி ஓவரின் கடைசி 2 பந்துகளில் மில்லர் அடுத்தடுத்து சிக்சர்களை அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

20 ஓவர்கள் நிறைவில் லக்னோ அணி 8 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் மிட்சல் ஸ்ரார்க் 3, குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

210 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டில்லி அணி, அசுதோஷ் சர்மா ஆட்டமிழக்காமல் பெற்ற 67 ஓட்டங்கள் துணையுடன் 19.3 ஓவர்களில் 211 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட்டால் திரில் வெற்றி பெற்றது. (ம-7)

## ஐ.பி.எல் செய்தித் துளிகள்...


### டோனியின் மின்னல் வேக ஸ்டம்பிங்



வயசானாலும் சிங்கம் சிங்கம் தான்னு சொல்ற மாதிரி தன்னோட மின்னல் வேக ஸ்டம்பிங்கால் மும்பை கப்டன் சூர்யகுமார் யாதவ் அவுட் பண்ணிய டோனியின் காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மும்பை - சென்னை அணிக்கெதிராகப் போட்டியில் 11 ஆவது ஓவரை நூர் அஹ்மத் வீசிய நிலையில் அந்த ஓவரின் மூன்றாவது பந்தை எதிர்கொண்ட சூர்யகுமார் யாதவ் இறங்கி ஆட முயற்சி செய்து பந்தை தவறவிட்டார்.

அப்போது ஸ்டம்பிற்கு பின்னால் இருந்த டோனி, பந்தைப் பிடித்து மின்னல் வேக ஸ்டம்பிங்கை செய்து அசத்தினார். இந்நிலையில் டோனியின் இந்த ஸ்டம்பிங் குறித்த காணொளியானது இணையத்தில் வைரலாகி வருகிறது. (6-8)



மும்பை இந்தியன்ஸ் அணியின் அறிமுக வீரர் விக்னேஷ் புத்தூர் சி.எஸ்.கேவிற்கு எதிராக 3 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். 23 வயதான இடதுகை லெக் ஸ்பின்னரான இவர் கேரளாவைச் சேர்ந்தவர். இவர் மாநில அணிக்காக விளையாடாத நிலையில் ஐ.பி.எல் இல் அறிமுகமாகி அசத்தியுள்ளார். சி.எஸ்.கே அணியின் கப்டன் ருதுராஜ் கெய்க்வாட் உட்பட மூன்று முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தினார். இவரது சிறப்பான பந்துவீச்சு சி.எஸ்.கே அணியைத் திணற வைத்தது. (6-8)

## இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் சாதனை படைத்த சன்ரைசர்ஸ்

உலகளவில் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் ஒரு இன்னிங்சில் அதிக முறை 250 ஓட்டங்களுக்கு மேல் அடித்த ஒரே அணி என்ற சாதனையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி பெற்றது. ராஜஸ்தான் அணிக்கெதிரான நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் இச்சாதனையைப் படைத்துள்ளது.

இதேவேளை இந்தியன் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடர்களில் அதிக பட்ச ஓட்டங்களை விளாசிய அணிகளின் வரிசையில் முதல் மூன்று இடங்களை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி தன்வசப்படுத்தியுள்ளது.

கடந்த ஐ.பி.எல் தொடரின் போது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி குவித்த 287 ஓட்டங்களே அதிகபட்ச ஓட்டங்களாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன் ஐ.பி.எல் வரலாற்றில் பெறப்பட்ட இரண்டாவது அதிகபட்ச ஓட்டங்களாக ராஜஸ்தான் அணிக்கெதிராக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி குவித்த 286 ஓட்டங்கள் பதிவாகியுள்ளன. குறித்த போட்டியில் சன்ரைசர்ஸ் 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

மேலும் கடந்த 2024 ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி குவித்த 277 ஓட்டங்கள் மூன்றாவது அதிகபட்ச ஓட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வருடம் காச நோயினால்

# வவுனியாவில் 9 பேர் உயிரிழப்பு

## மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி

(குருமன்காடு)

**காச நோயினால் வவுனியாவில் கடந்த வருடம் 9 பேர் இறந்துள்ளதுடன், 56 பேர் நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு பிரிவின் வைத்திய பொறுப்பதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவிக்கையில், இம்முறை "ஆம் எங்களால் காச நோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்" எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 56 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். அதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் நோய் வந்து உரிய நேரத்தில் சிகிச்சைக்கு வராமல் காலதாமதமாக வந்தமையால் அந்த மரணம் ஏற்பட்டது.

குறிப்பாக தொடர்ச்சியாக இரு வாரங்களிற்கு மேற்பட்ட இருமல் மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் இப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொது வைத்தியசாலைகளுக்கு சென்று சாதாரண சளிப்பரிசோதனையினை இலவசமாக செய்து கொள்வதன் மூலம் இந்த நோயினை இனங்காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய்க் கிருமி தங்கக்கூடும். அப்படியானவர்களுக்கு பரிசோதனையினை செய்வதன் மூலம் அதனை கண்டறியலாம்.

ஒருவருக்கு காசநோய் ஏற்பட்டால் ஆறு மாதத்திற்கு நேரடி கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளை பெற்றுக்கொண்டால் அதனை முற்றாக குணப்படுத்தலாம். அதற்கான மருந்து உள்ளது. அது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத்தவறினால் அது தீவிரமடைந்து இறப்பிற்கு வழி வகுக்கும் எனத் தெரிவித்தார். (6-8-250)

# தொலைத் தொடர்பு கோபுரங்களின் மின்கலங்கள் திருட்டு-ஐவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களின் மின்கலங்களை தொடர்ச்சியாக திருடி வந்த குற்றச்சாட்டில் கடற்படையின் முன்னாள் சிப்பாய் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழில் அமைந்துள்ள கைத்தொலைபேசி தொலைத் தொடர்பு வலையமைப்புக்களின் தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு பொருத்தப்பட்டிருந்த மின்கலங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில், பொலிஸ் நிலையங்களில், குறித்த நிறுவனங்கள் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளன

முறைப்பாடுகளின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், மின்கலங்களை களவெடுத்தவர்கள் அம்பாறை பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற விசேட பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை அம்பாறையில் இருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் கொண்டு வந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த வேளை கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படை முன்னாள் சிப்பாய் எனவும், மற்றுமொருவர் களவாடப்பட்ட மின்கலங்களை கொள்வனவு செய்தவர் எனவும் ஏனைய மூவரும் களவுக்கு உடந்தையாக செயற்பட்டவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

அதேவேளை யாழில் மாத்திரம் 192 மின்கலங்களை களவாடியுள்ளனர் எனவும், மின்கலம் ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர். (6-8)

# இராசிபலன்

25.03.2025
பங்குனி 11, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பின்னிரவு 12.22 மணிவரை

திருவோணம் பின்னிரவு 12.38 மணிவரை
சுபநேரம் 10.45-12.15 மணிவரை
இராகுகாலம் 3.15-4.45 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்

**வளவன்**




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.




வரவைக் காட்டிலும் செலவு கூடும், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.




சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.




நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.




செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் புகழ்கூடும், வளர்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு.




செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெற கந்தனை வழிபட வேண்டிய நாள்.




சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவது இல்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம்



(குருமன்காடு)

வவுனியாவில் காச நோய் தொடர்பான விழிப் புணர்வு ஊர்வலம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா, வைத்திய சாலை உள்வட்ட வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் ஆரம்பித்த விழிப்புணர்வு ஊர்வலமானது யாழ் வீதியை அடைந்து வைத்தி யசாலை சுற்று வட்ட வீதி ஊடாக கண்டி வீதியால் சென்று மணிக்கூட்டு கோபுரச் சந்தி ஊடாக பசார் வீதியை அடைந்து ஹொரவப்பொத் தானை வீதி ஊடாக வைத் தியசாலையை சென்றடைந் தது. இதன்போது காச நோயைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டதுடன், விழிப்புணர்வு துண்டு பிர சுரங்களும் வழ்ங்கப்பட் டன. இதில் தாதியர்கள், நூற்றுக்கு மேற்பட்ட முச் சக்கர வண்டிகளும் கலந்து கொண்டன. (6-8-250)

# மேர்வின் சில்வாவின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட 3 சந்தேக நபர்களும் மீள விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை குறித்த மூவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு மஹர நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிரிபத்கொட பகுதியில் உள்ள அரசாங்க நிலத்தைப் போலி பத்திரங்களைப் பயன் படுத்தி விற்பனை செய்த தாகக் கூறப்படும் குற்றச் சாட்டில் முன்னாள் அமைச் சர் மேர்வின் சில்வா உள் ளிட்ட மூன்று பேர் கடந்த 5 ஆம் திகதி குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.(6-8)

# கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி விபத்து

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் இருந்து பொன்னாலைப் பாலம் வழியாக பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று நேற்று வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளா னது.

இவ் விபத்தின் போது, அந்த வண்டியில் இருந்த தந்தையும் மகனும் படுகாய மடைந்த நிலையில் மீட்கப் பட்டு , சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா மருத் துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.



விபத்து தொடர்பான விசாரணைகளை ஊர்கா வற்றுறை பொலிஸார் மேற் கொண்டு வருகின்ற னர். (6-8-33)

# கால்பந்தாட்டப் போட்டியில் சம்பியனான வட்டக்கச்சி



(தருமபுரம்)

2025 ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச செயலக கால் பந்தாட்ட போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கரைச்சி பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக் கிடையிலான 2025 ஆம் ஆண் டுக்கான கால்பந்தாட்ட தொடர் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம் பமாகிய நிலையில் நேற்று முன் தினம் இறுதிப்போட்டி நடை பெற்றது.

இறுதிப்போட்டியில் ஆனந்த புரம் ஸ்ரார் ஈகில் விளையாட் டுக்கழகமும் வட்டக்கச்சி லக் கிஸ்ரார் விளையாட்டுக்கழக மும் மோதியிருந்தன.


90 நிமிடங்கள் கொண்ட விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப்பெற தண்டஉதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளை யாட்டுக்கழகம் 4 இற்கு 3 என்ற கணக்கில் ஸ்ரார் ஈகில் விளை யாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பி யனாகியது.

கரைச்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் இராசையா போல்ராஜ் தலை மையில் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

உதவிப்பிரதேச செயலாளர், மாவட்ட உதைபந்தாட்ட சம் மேளன தலைவர் மற்றும் செயலாளர், முட்கொம்பன் மகா வித்தியாலய முதல்வர், மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தலைவர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம சேவை யாளர், பொலிஸ் உத்தியோகத் தர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.(6-8-316)

## விழிப்புலனற்றோர் சங்க

# அங்கத்தவர்கள் அறுவருக்கு பட்டங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா வில் யாழ். விழிப்புலனற்றோர் சங்க அங்கத்துவர்களான அறு வர்பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

வி.விஜயலாதன் முது மாணிப்பட்டமும், க. யதீபன், யோ. பார்த்தீபன் மற்றும் த.அமலநிதுசன் ஆகியோர் பொதுக் கலைமாணிப்பட்டமும், த. அன்றிட் ஜக்சன் சட்டமாணி பட்டமும், அன்ரனி லாவோஸ் மேரிறெசோதா சிறப்புக் கலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (6-8)

# நாடக விழா

(யாழ்ப்பாணம்)

உலக நாடக தினத்தை முன்னிட்டு (மார்ச் 27) கோப்பாய் ஆசிரியர் கலா சாலையும் செம்முகம் ஆற் றுகைக்குழுவும் இணை ந்து முன்னெடுக்கும் " நாடக விழா" நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் ஆசி ரியர் கலாசாலை ரதிலக்ஷ்மி உள்ளக அரங்கில் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவில் சிறுவர் நாடகம், குறுநாடகம், பொம் மைகள் அரங்கு போன்ற நாடக நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (6-8)

# சர்வதேச மகளிர் தின விழா

(கரணவாய்)

அல்வாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மும் கிராம அபிவிருத்தி சங்கமமும் இணைந்து நடத்தும் "சர்வ தேச மகளிர் தின விழா" (2025) நாளை புதன்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கு வட மராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அல்வாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தின் தலைவி திருமதி. ஜனனி நரேஸ் தலை மையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக ஹரி என்ஜி னியரிங் முகாமைத்து வப் பணிப்பாளர் சோ. யாதவன் கலந்து கொள்ளவுள் ளார். (6-8-60)

# நீச்சல் வீரனின் சாதனை 71 ஆண்டுகள் பூர்த்தி



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறை சேர்ந்த நீச்சல் வீரன் முருகுப் பிள்ளை நவரத்தினசாமி 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்து இன்றுடன் 71 ஆண்டுகள் பூர்த்தியடை கின் றுள்ளன. (6-8)



வரலாற்றுச் சிறப்பு மிக்க தென்மராட்சி மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய 2 ஆம் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது பல அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து பொங்கல் பொங்கி, படையல் இட்டு தமது வழிபாடுகளில் ஈடுபட்டு இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அநுரவின் எம்.பி ஓய்வூதியம் நிறுத்தம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகப் பெற்று வந்த ஓய்வூதியம் அடுத்த மாதம் முதல் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இது குறித்து பாராளுமன்ற நிதி இயக் குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஒரு ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினராக ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்திருந்தால், அவர் பாராளுமன்ற ஓய்வூதியத்திற்கு உரிமையுடையவர்.

அத்தோடு, அவர் ஓய்வு பெற்றவுடன், அவர் ஜனாதிபதி ஓய்வூதியத்திற்கும் உரிமையுடையவர். இந்த வழியில் இரண்டு ஓய்வூதியங்களைப் பெற விரும்பவில்லை என்று அநுரகுமார திஸாநாயக்க கடந்த 21 ஆம் திகதி பாரா ளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராகப் பெறும் ஓய்வூதியப் பலன்களை நீக்குவதாக அநுரகுமார திஸாநாயக்க பாராளு மன்றத்தில் அறிவிப்பதற்கு முன்பு, அவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும் கடிதம் மூலம் தகவல் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அந்தக் கடிதத்தை அதன் நிதி இயக்குநருக்கு அனுப்பியுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# விசா வழங்குவதாகக் கூறி இஸ்ரேலில் மோசடி

## இலங்கையர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களில், ஏதிலிகள் விசா வைத்திருப்பவர்களுக்கு நாட்டில் வேலை செய்வதற்காக சட்டப்பூர்வ விசாக்களை வழங்குவதாக தெரிவித்து பண மோசடியில் ஈடுபடும் ஒரு குழு குறித்து தகவல் கிடைத்துள்ளதாக இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்தகைய திட்டம் எதுவும் செயற்பாட்டில் இல்லை எனவும், இது போன்ற பொய்யான வாக்குறுதிகளை நம்பி பண மோசடி செய்பவர்களிடம் ஏமாற வேண்டாம் எனவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டார, மக்களை வலியுறுத்தியுள்ளார். இக்குழுவினர் சில தனிநபர்களிடம் 1.5 மில்லியன் ரூபாவை செலுத்துமாறும், அதில் ஒரு பகுதியை முற்பணமாக வழங்குமாறும் கேட்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இஸ்ரேல் அரசாங்கம் இது போன்ற எந்தவொரு விசா வழங்கும் செயல்முறையிலும் ஈடுபடவில்லை என இஸ்ரேலுக்கான இலங்கை தூதர் நிமல் பண்டார மேலும் தெரிவித்தார். (நி-8)

# போக்குவரத்து அபராதங்களுக்கு Govpay இல் கட்டணம்

(கொழும்பு)

போக்குவரத்து அபராதங்களை Govpay இல் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு தெரிவித்துள்ளது.

வாகன சாரதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், பொதுமக்கள் விரைவில் Govpay மூலம் போக்குவரத்து அபராதங்களை செலுத்த முடியும் என்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் உறுப்பினர் ஹர்ஷா புரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பான அடிப்படைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Govpay என்பது வரிகள், அபராதங்கள், பயன்பாட்டு கட்டணங்கள் மற்றும் கல்விக் கட்டணங்கள் போன்ற அரசு தொடர்பான சேவைகளுக்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரபூர்வ ஒன்லைன் கட்டணத் தளமாகும். (நி-8)

# அரச அச்சக ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

அரச அச்சக அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை அனைத்து ஊழியர்களின் விடு முறைகளும் நேற்று முதல் இரத்து செய்யப்பட்டுள்ளது என்று அரச அச்சக அதிகாரி பிரதீப் புஷ்பகுமார தெரிவித்தார்.

அரச அச்சக அலுவலகத்தில் பணிபுரியும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 1,100 ஆகும். இதற்கிடையில், அரச அச்சகத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அச்சகத்திற்குள் பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அரச அச்சக அலுவலகப் பணிப்பாளர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்தார்.

பாதுகாப்பு நோக்கங்களுக்காக அரச அச்சக அலுவலகத்திற்கு வெளியே பொலிஸ் சிறப்புப் படை நடமாடும் ரோந்துகள் செயற்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அரிசி ஏற்றிச் சென்ற பாரவூர்தி விபத்து



(பண்டாரவளை)

பண்டாரவளை, திக்கராவப் பகுதியில் வாகன விபத்து ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

அரிசி ஏற்றிச் சென்ற பாரவூர்தியொன்று வீதியை விட்டு விலகியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் சாரதி மற்றும் உதவியாளர் இருவரும் காயமடைந்துள்ளனர்.

எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு வழிவிடும் போது சாரதியால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமையினால் வீதியை விட்டு விலகி பாரவூர்தி கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1978 - இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி-பா:29<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: A/L,Canada<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15257 | பிறப்பு:1997 - இந்து<br>நட்சத்திரம் : புனர்பூசம்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: HNDE,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15280 |
| பிறப்பு: 1981 - இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கிபா:32 1/2<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: HNDA,DO<br>எதிர்பார்ப்பு : தகுதியானபெண்<br>தொ.இ: B/15258 | பிறப்பு : 1991 - இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>1 இல்செவ்<br>கி.பா: 32 1/2<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில் -<br>BSc,ProductionManager(London)<br>எதிர்பார்ப்பு - : உயர்பதவி<br>தொ.இ: G/15291 |
| பிறப்பு:1990 - இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம் :6"<br>தகைமை/தொழில்: O/L,Canada<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்<br>(வெளிநாடு)<br>தொ.இ: B/15259 | பிறப்பு: 1996 - இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கிபா: 4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc,Software Engineer<br>எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15292 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 152 அடி உயர தேர் சாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் பலி

### பெங்களூரில் சோகம்



(டில்லி)

இந்தியாவில், கர்நாடகா மாநிலம் பெங்களூரில் 152 அடி உயரத் தேர் திடீரென சாய்ந்ததில் 2 பேர் உயிரிழுந்துள்ளனர்.

கர்நாடகாவில் பெங்களூர், ஹுஸ்கூர் கிராமத்தில் பழைமை வாய்ந்த மத்தூரம்மா அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் அம்மனுக்குத் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. அதே போல் இந்த ஆண்டுக்கான திருவிழா தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதனிடையே திருவிழாவையொட்டி கடந்த சனிக்கிழமை தேரோட்ட நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெற்றுள்ளது. இதன்போது, 152 அடி உயரத் தேரில் அம்மன் எழுந்தருளிய நிலையில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம்பிடித்து இழுத்துள்ளனர். இந்தத் தேருடன் சேர்த்து நாகமங்களா மற்றும் ராய சந்திரா சாமி தேர்களும் சென்றுள்ளன.

இந்நிலையில் தேரோட்ட நிகழ்ச்சியின் போது திடீரென லேசான காற்றுடன் மழை பெய்ததால் 152 அடி உயர தேர் பக்தர்களின் மேல் சாய்ந்துள்ளது. இதனால் பக்தர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடியுள்ளனர். மேலும் தேரின் அடியில் 11 பக்தர்கள் சிக்கியுள்ளனர். இந்த விபத்தில் வீதியோரம் இருந்த வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இதையடுத்து தேரோட்டத்தையொட்டி பாதுகாப்புக்காக வந்த பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையினர் தேருக்கு அடியில் சிக்கி காயம் அடைந்த பக்தர்களை மீட்டுள்ளனர்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் பெங்களூரைச் சேர்ந்த ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் காயம் அடைந்த நபர்களை மீட்புக் குழுவினர் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (நி-8)

## பெண்களுக்கான கல்வித்தடையை நீக்குமாறு தலிபான்களுக்கு வலியுறுத்து



(ஜெனீவா)

ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்வி கற்பதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு தலிபான்களுக்கு ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் அங்கு பெண்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாகப் பெண்கள் கல்வி கற்பதற்கும் தடை விதித்துள்ளனர்.

இந்நிலையில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்கானிஸ்தானில் பெண்கள், குழந்தைகளின் உரிமைகள் மீறப்பட்டு வருவதாகவும், அனைத்துப் பெண் பிள்ளைகளும் பாடசாலை செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், திறமையான, புத்திசாலியான இளம் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டால் அதன் விளைவுகள் பல தலைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் ஐ.நா வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இஸ்ரேல்-காசாவுக்கு இடையிலான போர்ப் பதற்றம் ஐரோப்பிய நாடுகளில் வலுக்கும் போராட்டம்




(ஜெருசலேம்)

இஸ்ரேல்- காசாவுக்கு இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தி ஐரோப்பிய நாடுகளில் போராட்டம் வலுத்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லண்டன், ஸ்பெயின்ஸ், பிரான்ஸ், சுவீடன் உள்ளிட்ட நாடுகளில் ஏராளமான மக்கள் அந்நாட்டுக் கொடிகளை ஏந்தி தூதரகங்களை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**அந்த வகையில், ஸ்பெயின் நாட்டின் சான் செபாஸ்டியன் நகரில் பாலஸ்தீன** மக்கள் மீது நடத்தப்படும் படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி பேரணியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரம், பாலஸ்தீன கொடிகளை ஏந்தியவாறு [illegible] போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் லண்டனிலும் ஏராளமான மக்கள் கூடி முழக்கங்களை எழுப்பிப் போராடுவதுடன் இஸ்ரேலுக்கு வழங்கும் ஆயுத விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்று கோரி தூதரகத்தை அவர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

மேலும் சுவீடனில் வீதிகளில் குவிந்த மக்கள் காசா மக்களுக்கு ஆதரவாக பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண... 50 ஆய...

(காசா) —

கடந்த 2023 ஒ...
தாக்குதலில் ...
எண்ணிக்கை 50...
சுகாதார அமைச்ச...



கடந்த 24 மணி நேரத்தில் பதிவான 41 உயிரிழப்புகளையும் சேர்த்து தற்போது ... எண்ணிக்... உள்ளது.

## 500 வீதிக... மோட்டார் வா... செல்லத்...

### பிரான்ஸ் அரசு ...



(பாரிஸ்)

பாரீஸ் நகரில் உள்ள 500 தெருக்களில் கார்கள் உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்க பிரான்ஸ் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

காற்று மாசடைவைத் தடுக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரீஸில் 6,000 இற்கும் மேற்பட்ட வீதிகள் உள்ளன. அவற்றில் சுமார் 220 வீதிகளில் கார்கள் ...

## வெளிநாடு

# ...ணக் குழியாக மாறிய காசா

# ...ஆயிரத்தைக் கடந்த உயிரிழப்பு!

**...023 ஒக்டோபர் முதல் இஸ்ரேல் நடத்தி வரும் ...ல் கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் ...கை 50 ஆயிரத்தை கடந்துள்ளதாக காசா ...மைச்சகம் அறிவித்துள்ளது.**





தற்போது மொத்த பலி எண்ணிக்கை 50,021 ஆக உள்ளது. மேலும் அதன் அறிக்கையில் இதுவரை 113,000 இற்கும் மேற்பட்டோர் போரில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இறந்தவர்களில் எத்தனை பேர் ஹமாஸ் அமைப்பினர், எத்தனை பேர் பொதுமக்கள் என அமைச்சகம் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று ஐ.நாவின் அறிக்கை மேற்கோள் காட்டுகிறது.

காசா மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏமனின் ஹவுதிகள் தொடர்ந்து இஸ்ரேல் மீது ஏவுகணைகள் மற்றும் ரொக்கெட்டுகளை ஏவித் தாக்கி வருகின்றனர்.

இதில் ஈரானின் தொடர்பு இருப்பதாக இஸ்ரேல் சந்தேகிக்கிறது. இதன் காரணமாக, இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதே நேரத்தில், தெற்கு லைபனானில் இருந்து இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லாவினரும் ரொக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளை ஏவி வருகின்றனர்.

ஹமாஸ் அமைப்பும் ஏவுகணைத் தாக்குதலை தொடங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து காசா மற்றும் லைபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட போர் நிறுத்தத்தின்படி பணயக்கைதிகள் பரிமாற்றம் நடந்தது.

ஆனால் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் இழுபறி ஏற்பட்டுள்ளதால் காசாவில் நிலவிய தற்காலிக அமைதி தற்போது வெடிகுண்டுகளால் மீண்டும் முற்றாக சீர் குலைந்து வருகிறது.

கடந்த 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலின் சட்டவிரோத ஆக்கிரமிப்பை எதிர்த்து ஹமாஸ் அமைப்பினர் அந்நாட்டின் மீது திடீர் தாக்குதல் நடத்தியதில் இருந்து இஸ்ரேல், காசா மற்றும் ராஃபா உள்ளிட்ட நகரங்கள் மீது இடைவிடாது தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஙி-8)

---

...வீதிகளில்

## ...ர் வாகனங்கள் ...லத் தடை

### ...அரசு தீர்மானம்



[500 ... ளிட்ட ... வதற்கு ... ங்கம் ... க்கும் ... எடுக் ... ப்பட்டு ... மேற் ... ற்றில் ... ர்கள்]

உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள் செல்வதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையிலேயே பிரான்ஸ் அரசு மேலும் 500 வீதிகளில் மோட்டார் வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை பிரான்ஸில் சைக்கிள் மற்றும் பொதுப்போக்குவரத்தை உபயோகிக்க மக்களை ஊக்குவிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஙி-8)

---

டுவிட்டரின் நீலப்பறவை

## 34 ஆயிரம் டொலருக்கு ஏலம் போனது



(வோஷிங்டன்)

சமூக வலைத்தள செயலிகளில் பெரும் புரட்சியை டுவிட்டர் உண்டாக்கியது. அதன் பின், 2012 இல் டுவிட்டரில் சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.


அப்போது அதன் இலச்சினை இளைய தலைமுறையினரை கவரும் வகையில் நவீனமயமாக்கப்பட்டு ஒற்றை நீல பறவையாக மாற்றப்பட்டது. சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள தங்களுடைய தலைமையகக் கட்டடத்திலும் ராட்சத அளவில் தயாரான "நீலப்பறவை" இலச்சினையை பொருத்தினர்.

அதன்பின்னர் அந்த இலச்சினை அந்த நிறுவனத்தின் அடையாளமாக மாறியது. 2023 இல் டுவிட்டர் நிறுவனத்தை பெரும் தொழில் அதிபரான எலான் மஸ்க் கையகப்படுத்தி "எக்ஸ்" என அதற்கு மறுபெயரிட்டார். அதோடு நீலப்பறவை இலச்சினை பயன்பாடும் நின்றது. மேலும் நிறுவன கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த நீலப்பறவை இலச்சினை அகற்றப்பட்டது.

இந்தநிலையில் அரிய பொருட்களை ஏலம்விடும் பிரபல நிறுவனம் ஒன்று "எக்ஸ்" நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த "நீலப் பறவை" இலச்சினையை கையகப்படுத்தி ஏலம் விட்டது. 12 அடி நீளம், 9 அடி அகலம், 254 கிலோ எடை கொண்ட அந்த இலச்சினை சுமார் (34 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு) ஏலம் போனதாக அறிவித்துள்ளது. (ஙி-8)

---

## வைத்தியசாலையை விட்டு வெளியேறினார் போப்



(வத்திக்கான்)

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போப் பிரான்ஸிஸ் சிகிச்சைகளின் பின்னர் நேற்று வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பினார்.

எவ்வாறு இருப்பினும் போப் பிரான்ஸிஸ் 2 மாதங்கள் கட்டாயமாக ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.


88 வயதான போப் பிரான்சிஸ் மூச்சுக் குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள ஜெமெலி மருத்துவமனையில் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில், நுரையீரல் இரண்டிலும் நிமோனியாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து, அவருக்கு அண்டிபயோடிக் மருந்துகள் அளிக்கப்பட்டு மருத்துவ கண்காணிப்பில் இருந்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஙி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுத் தூதுவர்களின் நற்சான்றிதழ் பத்திரங்கள்

## ஜனாதிபதியிடம் கையளிப்பு







(கொழும்பு)

இலங்கைக்கான புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று வெளிநாட்டுத் தூதுவர்கள் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தங்கள் நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

பிரான்ஸ், பாலஸ்தீனம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, பிரான்ஸ் தூதுவராக ரெமி லம்பேர்ட்டும், பாலஸ்தீன தூதுவராக இஹாப் ஐ.எம். கலீலும், நேபாள தூதுவராக கலாநிதி பூர்ண பகதூர் நேபாளியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 200 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 400 | 500 | 400 | 450 |
| தக்காளி | 200 | 120 | 200 | 180-200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250 | 200-250 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 230 | 320 |
| கரட் | 600 | 600 | 700 | 700 | 800 |
| பூசணி | 140 | 120 | 140 | 80-100 | 150 |
| புடோல் | 180 | 150 | 150 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 60-80 | 140 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-250 | 300 | 80-200 | 120 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 145 | 150 |
| பாகற்காய் | 450 | 500 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 280 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 260 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 150 | 200 | 300 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 650 | 500 | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 1500 | 1800 | 3000 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 100 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 280 | 200 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 80-100 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 345

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## அனுசரித்துப் போவது எப்படி?

சில பேரைப்பற்றி இப்படி சொல்லுவது உண்டு. அடுத்தவர்களை அனுசரித்து நடக்க தெரியவில்லை, அவன் என்ன சேர் மனுசன்? அப்படி என்பார்கள். சக மனிதர்களுடன் எப்படிப் பழகுவது என்று தெரியாததனாலேயே பலர் இன்றைக்கு சங்கடப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். வசதி வாய்ப்புக்கள் சரியாக இருக்கும். ஆனால் வாழ்க்கை சரியாக இருக்காது. இன்னொருத்தரிடம் எப்படிப் பேசுவது பழகுவது என்று தெரியாததனாலேயே இந்த அவஸ்தை.

சரி இந்த அவஸ்தையில்லாமல் வாழுவது எப்படி? இதற்கு அனுபவசாலிகள் சில வழிமுறைகளைச் சொல்லுகிறார்கள். அதெல்லாம் என்ன என்பதை இப்போது தெரிந்து கொள்ளுவோம்.

முதலில் நமது நாக்கு நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும். வார்த்தைகளைக் கொட்டி விட்டு அதன்பின் அள்ள முடியாமல் இருந்து கஷ்டப்படக் கூடாது. எப்படிப் பேசுகிறோம் என்பது முக்கியம். பேசும் போது எப்படி முகத்தை வைத்திருக்கிறோம் என்பது முக்கியம்! அன்பாக பேசினாலும் நன்றாக இருக்கும்.

அப்படிப் பேசும்போது ஆதரவாக அவர் தோள் மேல் ஒருகையை போட்டுப் பேசினாலே இன்னமும் நன்றாக இருக்கும்.

இரண்டாவது விடயம், இன்னொருத்தரிடம் பேசும் போது வாக்குறுதிகளை அள்ளி வீசக்கூடாது. கொடுக்கின்ற வாக்குறுதி குறைவாக இருக்க வேண்டும்.

அப்படி கொடுத்த வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருத்தரை பாராட்டுகிறோம் என்றால் அது ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். நமது பாராட்டு அல்லது விமர்சனம் அடுத்தவருடைய முன்னேற்றத்திற்கு உதவுகின்றது மாதிரி இருக்க வேண்டும்.

நாம் சொல்லுவதை கேட்டு விட்டு அவன் தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடக்கூடாது. எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும். முகம் மலர்ச்சியாக இருக்க வேண்டும். மனிதன் என்று இருந்தால் வருத்தம், கவலை, ஏமாற்றம் எல்லாம் இருக்கத் தான் செய்யும். அதெல்லாம் மனதிலே இருக்க வேண்டும்.

அந்த வருத்தமும் கவலையும் ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு நமது முகத்தில் இருக்கும் மலர்ச்சியை மூடி மறைப்பதற்கு நாம் இடம் கொடுத்து விடக்கூடாது.

எந்த விடயத்தைப் பற்றி யாரிடம் பேசினாலும் வெளிப்படையாக பேச வேண்டும். திறந்த மனதுடன் பேச வேண்டும். மூடி மறைத்து மென்று முழுங்கி விட்டு இருக்கக்கூடாது. இன்னொருத்தரிடம் பேசும் போது விவாதம் செய்யுங்கள். இது தவறு இல்லை. ஆனால் வாதாடிக் கொண்டிருக்காதீர்கள். அதாவது Discuss செய்யலாம். ஆனால் Argue செய்யக்கூடாது.

நம்மிடம் இருக்கின்ற நல்ல குணங்களை நாங்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அந்த நல்ல குணங்களே நம்மளைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமாதிரி நடந்து கொள்ள வேண்டும்.

அதே மாதிரி அடுத்தவர்களிடம் உள்ள கெட்ட குணங்களைப் பற்றி அவசியமில்லாமல் நாங்கள் பேச வேண்டியதில்லை. உங்களைப் பற்றி யாராவது தவறாகப் பேசுகிறார்களா? அப்படி அவர்கள் பேசுவதிலே உண்மை இல்லையா? அப்படி என்றால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். விட்டு விடுங்கள். அது தானாக போய் விடும். ஒரு நான்கு, ஐந்து பேராக பேசிக் கொண்டிருக்கிறார்களா, எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். யாரையும் அலட்சியப்படுத்தாதீர்கள். அவர்களாக பேசலாம். ஆனால் உங்களுடைய நகைச்சுவை அவர்களை கேலி செய்வதாக இருக்கக்கூடாது.

நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை என்கின்ற தவிப்பு நம்மிடம் இருக்கக்கூடாது. அது தேவையில்லை! உங்கள் செயற்பாடுகள் தெளிவாக இருக்கட்டும். பாராட்டு தானாக உங்களைத் தேடிக் கொண்டு வரும். இன்னொரு மனிதனுடைய மனதில் கௌரவமான ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டும் என்றால் நாங்கள் இந்த குணத்தையெல்லாம் நம்மிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதெல்லாம் அனுபவசாலிகள் சொல்லியிருக்கின்ற குறிப்புக்கள். இந்த குறிப்புக்களை சரியாக புரிந்துகொள்ளவேண்டும். அது முக்கியம். நாங்கள் புரிந்து கொண்டால் என்ன ஆகும் தெரியுமா? இதைக் கேளுங்கள்.

ஒருத்தர் வந்தார். சேர் அடுத்தவர்களை தோள் மேலே கையைப் போட்டுக்கொண்டு அன்பாக பேச வேண்டும் என்று சொன்னீர்கள். அப்படித்தான் பேசினேன். அவர் முதுகைக்கூட தட்டிக் கொடுத்தேன். என் வேலை போய் விட்டது சேர், வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள் என்றார். யாரிடம் அப்படி பேசினீர்கள் என்று கேட்டேன். எனது முதலாளியிடம் சேர் அப்படி என்று சொன்னார் சோகமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வனமெல்லாம் புதிர்' நூல் அறிமுக நிகழ்வு கிளிநொச்சியில்



(கிளிநொச்சி)

2024 ஆம் ஆண்டு சிறந்த அறிவியல் புனை கதைக்கான சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற, ஜனகா நீக்கிலாஸ் எழுதிய "வனமெல்லாம் புதிர்" நூலின் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நூலின் முதற் பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக் கொண்டதுடன், நூல் அறிமுக உரைகளை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச் செல்வி (சந்திரகலா) ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.

படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்போடு நடைபெற்ற இந் நிகழ்வில், போர்க்கால அறிவியல் கண்டு பிடிப்புகளை அடையாளப்படுத்தும் வகையில் மங்கல விளக்கிற்குப் பிரதியீடாக குப்பி விளக்குகள் ஏற்றப்பட்டது பலரதும் கவனத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)







# பட்டங்களைப் பெற்ற வாழ்வக மாணவர்கள்







(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வராம் இடம்பெற்ற 39 ஆவது பட்டமளிப்பு விழாவில் சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் மாணவர்கள் மூவர் பட்டங்களை பெற்றுள்ளனர்.

வி.விஜயலாதன் (பழைய மாணவன்) முதுமாணிப் பட்டமும் த.அமலநிதுசன் மற்றும் திருமதி. வானுஜா பிரகான் இருவரும் பொதுக்கலைமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளனர்.

குறித்த பட்டங்கள் பெற்ற மூவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாழ்வக நிறுவனத்துக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். (6-8)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற தேர்தல் கலந்துரையாடல்

(தருமபுரம்)

தேர்தல் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வது மற்றும் தேர்தல் கடமைகளின் போது பொலிஸாரின் வகிபாகம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர், பி.பீ. சி.குலரத்தன, கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண உதவித்தேர்தல் ஆணையாளர்கள் உள்ளிட்டோர் மற்றும் வடமாகாண பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன் பிரதிப் பொலிஸ்மா அதிபர் 'சூம்' ஊடாகவும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3318

**சந்தோஸ்**




**அஸ்வினியா**




**சுகந்தன்**




**கரினா**




**லிதுர்சிகா**




**மிதுனா**

15 வயதில்
போனுக்கு ஆசை
20 வயதில்
வைக்குக்கு ஆசை
25 வயதில்
நல்ல வேலைக்கு ஆசை
30 வயதில் சொந்தமான
வீட்டுக்கு ஆசை
ஆனால் நான்
ஆசைப்படாமலேயே என்மீது
ஆசைப்பட்டது கடன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 730





"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? தந்தையின் கட்டளையை மீறி என்னை இங்கே இன்னமும் ஒழிந்து மறைந்து வாழச் சொல்கிறாயா?"

"ஆம்! நீ இப்போது தஞ்சைக்கு வந்தால் நாடெங்கும் ஒரே குழப்பமாகிவிடும். மக்கள் மதுராந்தகர் மீதும் பழுவேட்டரையர்கள் மீதும் ஒரே கோபமாயிருக்கிறார்கள். உன்னைச் சிறைப்படுத்திக் கொண்டுவரச் சொன்னதற்காகச் சக்கரவர்த்தி மீதுகூட ஜனங்கள் கோபமாயிருக்கிறார்கள். உன்னை இப்போது கண்டால் மக்களின் உணர்ச்சி வெள்ளம் பொங்கிப் பெருகும். அதன் விளைவுகள் என்ன ஆகுமோ தெரியாது. உடனே உனக்குப் பட்டம் சூட்டவேண்டும் என்று ஜனங்கள் கூச்சல் போட்டாலும் போடுவார்கள். தஞ்சைக் கோட்டையையும், அரண்மனையையும் முற்றுகை போடுவார்கள். ஏற்கனவே மனம் புண்பட்டிருக்கும் தந்தையின் உள்ளம் மேலும் புண்ணாகும். தம்பி! இராஜ்யத்துக்கு ஆபத்து வந்திருக்கிறது என்று உன்னை நான் வரச்சொல்லி ஓலை எழுதினேன். அதே காரணத்துக்காக இப்போது நீ திரும்பி இலங்கைக்குப் போய்விட்டால் நல்லது என்று நினைக்கிறேன்"

"அக்கா! அது ஒருநாளும் இயலாத காரியம். நம் தந்தையைப் பார்க்காமல் நான் திரும்பிப் போகமாட்டேன். தஞ்சைக்கு நான் இரகசியமாக வருவது நல்லது என்று நினைத்தால் அப்படியே செய்கிறேன். ஆனால் சக்கரவர்த்தியை நான் பார்த்தேயாக வேண்டும். அவரிடம் என்னைக் காப்பாற்றிய காவேரி அம்மன் யார் என்பதைச் சொல்லவேண்டும்."

"அதையெல்லாம் நானே சமயம் பார்த்துச் சொல்லி விடுகிறேன். நீ வந்துதான் தீரவேண்டுமா?"

"நேரில் பார்த்த நானே சொன்னால் தந்தைக்குப் பூரண நம்பிக்கை ஏற்படும்! என் மனமும் ஆறுதல் அடையும். பெரியம்மாவை அழைத்துக்கொண்டு வருவதற்கு அவருடைய அனுமதியையும் பெற்றுக் கொள்வேன்."

"அருள்வர்மா! உன் இஷ்டத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் இன்னும் ஒரு வாரகாலம் சூடாமணி விஹாரத்தில் இரு. நான் முன்னதாகத் தஞ்சைக்குப் போகிறேன். நீ வந்திருப்பதாகத் தந்தையிடம் அறிவித்துவிட்டுச் செய்தி அனுப்புகிறேன். தம்பி! நான் இங்கே உன்னைத் தேடி வந்தது உன்னைப் பார்ப்பதற்காக மட்டுமல்ல உன்னிடம் ஒரு வரம் கோரிப் பெறுவதற்காக வந்தேன். அதை நிறைவேற்றி வைத்து விட்டால், பின்னர் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன். ஆண்பிள்ளைகள் அபாயத்துக்கு உட்பட வேண்டியவர்கள்தான். வீர சௌரிய பராக்கிரமங்களின் இணையில்லாதவன் என நீ புகழ் பெற வேண்டும் என்பது தான் என் ஆசை. ஆனால் மறுபடி நீ உன்னை அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்வதற்கு முன்னால் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்" இவ்வளவு பெரிய பீடிகை எதற்கு, அக்கா! நீ சொல்லுவதை என்றைக்காவது நான் மறுத்ததுண்டா?"

"மறுத்ததில்லை. அந்த நம்பிக்கையோடுதான் இப்போதும் கேட்கிறேன். ஆதித்த கரிகாலன் திருமணம் செய்து கொள்ளவில்லை. திருமணம் செய்து கொள்வான் என்றும் தோன்றவில்லை சுந்தர சோழரின் குலம் உன்னால்தான் விளங்க வேண்டும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எதிரியால் ஏற்பட்ட விளைவு

(21.03.2025 தொடர்ச்சி)

நிறைய சிறிய மீன்களைப் பிடித்தது. ஒரு கீரி வசித்து வந்த ஒரு பொந்துக்கருகில் சென்று ஒரு மீனைப் போட்டது. சிறிது தொலைவு சென்று மற்றொரு மீனைக் கீழே போட்டது. இவ்வாறு வரிசையாக மீன்களைப் போட்டவாறு தான் கூடு கட்டியிருக்கும் மரத்தருகில் வந்து முடித்தது.

மீன் வாசனையை முகர்ந்தவாறு பொந்திலிருந்து வெளியே வந்தது கீரி. "ஆ இதோ ஒரு மீன்!" என்று கத்தியவாறே மகிழ்ச்சியுடன் உடனே அந்த மீனை எடுத்துத் தின்றது.



அடுத்தது, அடுத்தது என்று வரிசையாகக் கீழே கிடந்த மீன்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தின்றவாறே கொக்குகளும் பாம்பும் இருந்த மரத்தினடியில் வந்து நின்றது.

அதற்குப் பிறகு அங்கு மீன் இல்லாததால் அங்கே நின்று சுற்று முற்றும் பார்த்தது கீரி. மரத்தினடியில் இருந்த கருநாகம் திடீரென்று அதன் கண்களில் தென்பட்டது. கீரியைப் பார்த்த நாகமும் சண்டைக்குத் தயாரானது. இரண்டிற்குமிடையே பயங்கர சண்டை நீண்ட நேரம் நடைபெற்றது.

இறுதியில் கீரி பாம்பைக் கொன்றது. இந்தச் சண்டையைக் கூட்டிலிருந்து பார்த்த கொக்குகள் பாம்பு இறந்தவுடன் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டன.

மறுநாள் அந்தக் கீரி அதே போல் உண்ணுவதற்கு மீன்கள் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு அதே வழியாக வந்தது. உணவு ஏதும் கிடைக்காமல் மரத்தடியை அடைந்தது. மரத்தின் மீது ஏறி ஏதாவது தின்பதற்குக் கிடைக்குமா என்று பார்த்தது.

ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றிருந்த இரு கொக்குகளும் அந்த நேரம் திரும்பி வந்து கொண்டிருந்தன. மரத்திலிருந்து கீழே இறங்கும் கீரியைப் பார்த்தன.

பறந்து சென்று கூட்டை அடைந்தன. இந்த முறை கீரி கொக்கின் முட்டைகளைத் தின்றிருந்தது !

"ஐயோ! ஓர் எதிரியைப் பெறுவதற்காகத் தான் முதல் எதிரியை ஒழித்தோமா? பாம்பை ஒழித்தோம். இப்போது கீரி நம் முட்டைகளை அழிக்கிறதே !" என்று கொக்கு வருத்தத்துடன் தன் மனைவியிடம் கூறியது.

நீதி : எண்ணித் துணிக கருமம்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும்போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன.

- யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் அரசியல் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது

நாட்டின் எதிர்காலம் குறித்த சிங்கள மக்களின் தூரநோக்கை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடலாகாது.

உண்மை. சிங்கள மக்கள் அரசியலை தமது வாழ்வியலின் ஒருபகுதியாகக் கருதுகின்றனர்.

அதன் காரணமாகவே ஆட்சியாளர்களால் நாடு சூறையாடப்பட்டபோது ஒட்டுமொத்தச் சிங்கள மக்களும் வீதியில் இறங்கி ஊழல் புரிந்த ஆட்சியாளர்களை ஓட ஓடத் துரத்தினர்.

ஆம், விடுதலைப் புலிகளைப் போரில் வென்றவர்கள் நாங்கள் என்ற மமதையில் மகிந்த ராஜபக்ஷ தரப்பு இலங்கையின் ஆட்சி அதிகாரம் இனி ராஜபக்ஷ குடும்பத்திடமே நிலைத்திருக்கும் எனக் கருதினர்.

அதன் காரணமாகவே காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகையை அமைத்தனர்.

எனினும் ராஜபக்ஷ தரப்பின் சிறுமைத்தனம் சிங்கள மக்களிடம் எடுபடவில்லை. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தது மகிந்த ராஜபக்ஷ தரப்பு என்பதால், அவர்களை ஆதரிக்க வேண்டும்.

சிங்கள மக்களாகிய நாங்கள் மகிந்தவை எதிர்த்தால், அது தமிழ் மக்களுக்குச் சாதகமாகிவிடும் என்றெல்லாம் சிங்கள மக்கள் இம்மியும் நினைக்கவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை நாடு பற்றிய கருசனையே இருந்தது.

நாட்டைச் சூறையாடுகின்றவர்களை ஆட்சியில் அமர்த்தி மகாதவறு செய்து விட்டோம்.

எனவே நாங்கள் விட்ட தவறை நாங்களே சீராக்கம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது சிங்கள மக்கள் அரகலப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கத்தியின்றி, இரத்தமின்றி ஒட்டுமொத்தச் சிங்கள மக்களும் திரண்டபோது; ராஜபக்ஷ குடும்பம் நாட்டை விட்டுத் தப்பி ஓடுகின்ற நிலைமைக்கு ஆளாகியது.

இங்குதான் சிங்கள மக்களின் அரசியல் குறித்த மேலான கருசனை தெரியவருகிறது.

எனினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள், அரசியல் என்பது தேவையற்றது. வேலையில்லாதவர்களுக்குரியது. அதனோடு ஊடாடுவது ஆபத்தானது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

ஆக, வாக்களிப்பது மட்டுமே எங்களின் அரசியல் பணியாக உள்ளது.

இத்தகைய மனநிலை காரணமாக இன்றைய எங்கள் தமிழ் அரசியல் எவ்வாறாகிப் போயிற்று என்பதை நாம் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

பாராளுமன்றத்தைப் பார்த்தால் தெரியும். எங்கள் இனத்துக்கு மகிந்த தரப்பு செய்த கொடூரத்தை அநுர அரசு மீது சுமத்துவது போல நம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகின்றனர்.

உண்மையில் மகிந்தவும் அதற்கு முன்னைய சிங்கள ஆட்சியாளர்களும் மேற்கொண்ட தமிழின அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநுர அரசு நீதி வழங்க வேண்டும் என்றுதான் நாம் கேட்க வேண்டும்.

ஆனால், உணர்ச்சி வசப்படுகின்ற அளவிலேயே பாராளுமன்றத்தில் எங்கள் பிரதிநிதித்துவம் இருக்கிறது என்றால், நிலைமை எப்படி என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

### விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக நடந்து

# இலங்கை இராணுவத்தை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுக்க எத்தனிக்கிறது அரசாங்கம்

### தே.ம.சக்தி அரசுக்கும் புலிச்சாயம் பூசுகிறார் அஜித் பி.பெரேரா எம்.பி

*(கொழும்பு)*

விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகச் செயற்பட்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரைக் காட்டிக் கொடுக்க முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அல்ஜசீரா செய்திச் சேவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக, இலங்கை இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படைகளைக் குற்றவாளிகளாக சர்வதேசத்துக்குக் காண்பிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்தது.

அவ்வாறான அல்ஜசீராவின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இந்த அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. 30 ஆண்டுகளாகியும் கவனத்தில் கொள்ளாமலிருந்து பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை கண்களில் கண்ணீர் மல்க அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. அதனைக் கேட்டு சபாநாயகரும் கண்ணீர் வடிக்கின்றார். தமது தலைவர் ரோஹண விஜேவீரவை கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. கூறவில்லை. காலத்துக்குத் தேவையற்ற, ஆனால் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியவற்றையே தற்போதைய அரசாங்கம் செய்து வருகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்குச் சாதகமாகச் செயற்பட்டு, நாட்டின் இராணுவ வீரர்களையும் போரில் உயிர் தியாகம் செய்த பாதுகாப்புப் படையினரையும் சர்வதேசத்தின் மத்தியில் காட்டிக் கொடுப்பதற்கான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். *(ம-7)*

# சிறுமியை மின்கம்பத்தில் கட்டிவைத்துத் தாக்குதல்

### குடத்தனைப் பகுதியில் அரங்கேறிய கொடூரம்

பருத்தித்துறை குடத்தனை பொற்பதி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறுமி ஒருவரை மின்கம்பத்தில் கட்டிவைத்துத் தாக்கியமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மேற்படி பொற்பதி பகுதியில் வசிக்கும் 14 வயதுடைய சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23) மாலை அயலிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு பொருட்கள் வாங்கச் சென்றதாகவும் அங்கு இனிப்பு வகையை கையாடியதாகக் கூறி கடையின் உரிமையாளரான பெண் மேற்படி சிறுமியை மின்கம்பத்தில் கட்டிவைத்துத் தாக்கியுள்ளார்.

இதில் உடல் காயங்களுக்கு உள்ளான சிறுமி அன்றிரவே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நேற்று விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி சிறுமியின் உடலில் காயங்கள் காணப்படுவதன் காரணமாக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு வைத்தியசாலையில் உள்ள பருத்தித்துறை பொலிஸார் ஊடாக மருதங்கேணிப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் மருதங்கேணிப் பொலிஸார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்து சிறுமியிடம் வாக்குமூலம் பெற்றபோது மின்கம்பத்தில் கட்டிவைத்துத் தாக்கப்பட்டதாக சிறுமி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த கடை உரிமையாளரான பெண்ணின் வீட்டுக்குச் சென்ற வேளை வீடு பூட்டியிருந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து தொலைபேசி வாயிலாக அவர்களை மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. *(ம-7)*

# கசிப்பு விற்பனை இளைஞன் கைது

### சுழிபுரத்தில் சம்பவம்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 26 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒருபோத்தல் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன்,

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். *(ம-7)*

# இருவரைக் கொல்ல ரூ. 50 இலட்சம் டீல்

### தெய்வேந்திரமுனை இரட்டைப்படுகொலை தொடர்பில் வெளியான அதிர்ச்சித் தகவல்

*(மாத்தறை)*

மாத்தறை - தேவேந்திரமுனைப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் 50 இலட்சம் ரூபாய் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் உட்பட 4 சந்தேக நபர்களையும் எதிர் வரும் 29 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிப்பதற்கு மாத்தறை பதில் நீதவான் அனுமதி வழங்கியிருந்தார்.

அதன் பிரகாரம் சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போதே இந்தக் கொலை 50 இலட்சம் ரூபாய் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்காக இரண்டு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் இரு தரப்பினருக்கு இடையில் நிலவிவந்த மோதலின் விளைவாக இந்தக் கொலைகள் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## (29.03.2025-03.06.2027)

## எல்லோரிடமும் நல்ல பெயரை எளிதில் சம்பாதித்து விடும் துலாம் இராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.

**துலாம்:** எல்லோரிடமும் நல்ல பெயரை எளிதில் சம்பாதித்து விடும் துலாம் ராசி நேயர்களே! நீங்கள் தோல்வியைக்கண்டு துவளாதவர். போராட்ட குணம் உடையவர். எதிலும் முயற்சி செய்து வெற்றி காண வேண்டும் என்று விரும்புபவர். நீங்கள் நவக்கிரகங்களில் அசுரகுரு என்றழைக்கப்படும் தன காரகனாகிய சுக்கிரனை ஆட்சி நாயகனாக கொண்டவர்கள். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் பட்டம் பதவிகள் பெறுவீர்கள். திறமைகள் பல கொண்டவர்கள். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

•

**கிரகநிலை:** இதுவரை உங்களது பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி ரண ருண ரோக ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** பலவிதமான குழப்பங்கள் இருந்தும் திட சிந்தனைகளுடன் உங்கள் குறிக்கோள்களை அடைவீர்கள். வருமானத்தைப் பெருக்குவதற்கு நல்ல வழிகள் உதயமாகும். நிதி நெருக்கடிகள் ஏற்படலாம். குடும்பத்திலும் வெளி வட்டாரத்திலும் உங்கள் பேச்சுக்கு மதிப்பில்லாமல் போகலாம். எப்போதும் போல் சட்டத்தை மதித்து நடப்பீர்கள். இத்தன்மை, சில அன்பர்களுக்கு சாதகமான மேலிடத்துத் தொடர்புகளை உருவாக்கித் தரும். இல்லத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். நீங்கள் சார்ந்துள்ள துறையில் புகழின் உச்சியை நோக்கிப் படிப்படியாக முன்னேறுவீர்கள். அதேசமயம் கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். நண்பர்களின் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். உடலில் இருந்த நோய்கள் ஒவ்வொன்றாக மறையத் தொடங்கும்.

ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். எதையும் சிந்தித்து செயற்பட வேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப செயல்முறைகளை மாற்றிக் கொண்டு நன்மைகளைக் காண்பீர்கள். பந்தயங்கள், போட்டிகளிலும் வெற்றி வாகை சூடுவீர்கள். பெற்றோர் வழியில் நிலவி வந்த மனக் கஷ்டங்கள் தீர்ந்து, குடும்பத்தில் குதூகலம் நிறையும். நீங்கள் பிரபலம் ஆவீர்கள். உங்களை நாடி வந்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். அதேசமயம் உங்களின் பொருளாதாரத் திட்டங்களில் சிறிது தொய்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சில நேரங்களில் மனம் நொந்து போவீர்கள். இருப்பினும் பொருளாதாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும்.

சனி பகவானால் வாகனங்களுக்கு சிறிது பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். உங்களின் நண்பர்கள், உங்களுக்குத் தேவையானவற்றைத் தவிர்த்துத் தேவையற்ற விடயங்களைப் பேச நேரிடலாம். அதனால் எவரையும் முன்னுதாரணமாகக் கொள்ளாமல், உங்களின் தனித் தன்மையை வெளிப்படுத்திச் செயலாற்றுங்கள். உங்களின் வாழ்க்கையில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவார். தேவையற்ற கவலைகள் உங்கள் மனதை விட்டு அகலும். உங்களின் அணுகுமுறையால் பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்வீர்கள். வெளிநாட்டில் வசிக்கும் உங்கள் நண்பர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடுவீர்கள். அதனால் சிற்சில ஆதாயங்களும் ஏற்படும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அதேநேரம் சில சமயங்களில் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். இச்சமயங்களில் சக ஊழியர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அலுவலக வேலைகள் தொடர்பான பயணங்களால் நன்மை உண்டாகும். பண வரவுக்குக் குறைவு ஏற்படாது.




உங்களின் தன்னம்பிக்கை உயரும். எதிர்பாராத பதவி உயர்வால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போவீர்கள்.

வியாபாரிகளுக்கு கடும் முயற்சிகளுக்கு பின் தகுந்த இலாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும். தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர, புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தினாலும் கடன் சுமை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும். கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும்.

அரசியல்வாதிகளுக்குப் பெயரும், புகழும் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தால் பாராட்டப்படுவீர்கள். தொண்டர்களின் ஆதரவு, உங்களை உற்சாகப்படுத்தும். கட்சியில் புதிய பொறுப்புகளையும் பெறுவீர்கள். அவற்றை நேர்த்தியாகச் செய்து முடிப்பீர்கள். மக்களுக்கு நன்மை செய்வதற்கான உங்களின் முயற்சிகளை எதிர்கட்சியினரும் பாராட்டுவார்கள். புதிய பயணங்களால் உற்சாகம் அடைவீர்கள்.

கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் குறைவாகவே இருந்தாலும் பணவரவு சீராகவே தொடரும். இரசிகர்களின் ஆதரவும் அமோகமாக இருக்கும். உங்கள் திறமையினால் புகழைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். உங்களின் கற்பனை சக்தி ஊற்றுபோல் பெருகும். இது வருமானமாகவும் மாறி பயன் தரும்.

பெண்களுக்குக் கணவரின் அன்பும், பாசமும் அளவுக்கதிகமாகவே கிடைக்கும். ஆன்மீகச் சுற்றுலாவும், இன்பச் சுற்றுலாவும் சென்று மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறையும். பிள்ளைகளாலும் சந்தோஷம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மாணவர்கள் உழைப்பிற்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதனை புரிவார்கள். உழைப்பு குறைந்தால் உயர்வும் குறையக்கூடும். ஆனால் பெற்றோர்களின் ஆதரவு உங்களை உற்சாகப்படுத்தும். வெளி விளையாட்டுகளிலும் ஈடுபட்டு வெற்றிவாகை சூடுவீர்கள்.

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்:** கோபத்தை குறைத்து நிதானமாக பேசுவது பிரச்சினை ஏற்படாமல் தடுக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும்.

**சுவாதி:** வீட்டைவிட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். தந்தையின் உடல்நலத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்களுடன் வீண் பகை உண்டாகலாம். கவனமாக பேசுவது நல்லது. காய்ச்சல், சிரங்கு போன்ற நோய்கள் உண்டாகலாம்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** பணவரத்து அதிகரிக்கும். காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் இலாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைக்கும். புதிய ஓடர்கள் வரும்.

**பரிகாரம்:** சப்த கன்னியரை வழிபட்டு வரவும். லக்ஷ்மி அஷ்டோத்திரம் பாராயணம் செய்வது நலம் தரும். எலுமிச்சை கனியைப் பிழிந்து சாறு எடுத்து அம்மனுக்கு அபிஷேகத்திற்கு படைத்துவர வாழ்வில் வசந்தம் வீசும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார், பூநகரி...

வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் 336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

இந்தநிலையில் மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியது.

இதேவேளை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் இன்று வரை கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இராணுவம்...

வடிக்கை நேற்று மாலை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, வவுனியா தேக்கவத்தை ஆலடிச் சந்தியில் இருந்து தேக்கவத்தை மைதானம் வரையிலான பகுதியில் 3 மணி நேரம் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களைக் கைது செய்தல், குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்படும் நபர்களை கைது செய்தல், போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்காகவே இச்சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சுற்றிவளைப்பின்போது பொலிஸாருக்கு உதவிய இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ம-7,250)

## நல்லூர்...

பினர் ரஜீவன் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது, பல விடயங்களில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ரஜீவன் ஆகியோர் ஒருவருக்கொருவர் அரசியல் ரீதியான நக்கல் நையாண்டிகள் செய்து நேரத்தை வீண்விரயம் செய்ததால் கூட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர்.

"உங்கள் அரசியலையும் நக்கல், நையாண்டிகளையும் இங்க கதைச்சு நேரத்தை வீணாக்காதீர்கள்" என்று சபையில் அவர்கள் காட்டமாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் ஓரளவு அரசியல் நையாண்டிகள் இன்றிக் கூட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கூட்டத்தில் வீதிப் புனரமைப்பு, புகையிரதக் கடவை அமைப்பு, வீதிச் சமிக்ஞை பொருத்துதல், வடிகாலமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் பற்றிப் பேசப்பட்டது.

குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், இராமநாதன் அர்ச்சுனா, சிறீபவானந்தராஜா உள்ளிட்டோரும் துறைசார் திணைக்களப் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராமசேவகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசியல் கருத்துக்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எழுப்பப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்திருந்தது. (ம-7,33)

## அரசியல்...

ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பது என்பது சாதாரணமான விடயமல்ல. தற்போது சிறையில் இருக்கின்ற எவரும் சந்தேகத்தின் பெயரில் இருப்பவர்கள் அல்ல. அனைவரும் நீதிமன்றத்தின் மூலம் தண்டனை வழங்கப்பட்டவர்கள்.

எனவே அவர்களுக்கு இதற்கு முன் இருந்த ஜனாதிபதிகள் பொது மன்னிப்பு வழங்கியதுபோல் பொது மன்னிப்பு வழங்க முடியாது. உரிய நடைமுறைகளை நாங்கள் பின்பற்ற வேண்டும்.

அடுத்ததாகக் குறித்த சிறைக் கைதிகள் [illegible] செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ள சம்பவங்கள் மிகவும் பாரதூரமானவை.

முன்னாள் ஜனாதிபதிகளுடைய கொலைத் திட்டமிடல்கள், பிலியந்தலைப் பேருந்து குண்டு வெடிப்பு, மத்திய வங்கி குண்டு வெடிப்பு, கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்.

எனவே அவர்களை விடுதலை செய்வது என்பது இலகுவான விடயமல்ல. அதேபோல் இவர்களை விடுதலை செய்து சமூகத்தில் ஒற்றுமைப்படுத்துவதே ஒழிய இவர்களை வைத்து அரசியல் செய்ய எவருக்கும் இடம்கொடுத்து விடவும் கூடாது.

தற்போது ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சிற்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கும் இவர்கள் பற்றிய அறிக்கை ஒன்றை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஆட்...

- பூநகரி வீதி வழியாக மனைவி ஒரு துவிச்சக்கர வண்டியில் முன்னே பயணிக்க உயிரிழந்த கணவன் பிறிதொரு துவிச்சக்கரவண்டியில் 10 மாதக் குழந்தையை முன் கூடையிலிருத்திக் கொண்டு பயணித்துள்ளார்.

பின்னால் வேகமாக வந்த முச்சக்கரவண்டி துவிச்சக்கரவண்டியை மோதி தலைகீழாக புரண்டுள்ளது.

இதில் குழந்தை தூக்கி வீசப்பட்ட நிலையில், சிறு காயத்துடன் தப்பித்தது. யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## சைக்கிள்...

மன்னார் பேசாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அன்ரன் பெனாட் லோகு (வயது- 57) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை 22ஆம் திகதி இரவு 8.00 மணியளவில் காணாமல்போன மாட்டைத் தேடிச் சென்று மாட்டைப் பிடித்துக்கொண்டு பேசாலை - தலைமன்னார் வீதியைக் கடக்க முற்பட்டபோது அவ்வழியாக வந்த துவிச்சக்கரவண்டி மோதியதில் தலையின் பிற்பகுதியில் அடிபட்டு விழுந்துள்ளார்.

உடனடியாக பேசாலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு 23ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)


மஹஜன சம்பத — திகதி 2025.03.24 — சீட்டிழுப்பு இலக்கம் 5785 — N 8 3 7 3 8 5
அத சம்பத — N 7 3 8 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0360
National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.03.24 — சீட்டிழுப்பு இலக்கம் - 1815 — I 19 21 28 81 I — 64246

மெகா பவர் — திகதி 24/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2133 — N 09 13 19 68 71

ஜய — திகதி 2025.03.24 — சீட்டிழுப்பு இலக்கம் 053 — T 0 5 3 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4027 — சீட்டிழுப்பு திகதி 24.03.2025 — P 23 38 58 78 — P

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.03.24 — சீட்டிழுப்பு இலக்கம் 1094 — மீனம் 28 30 43 45 மீனம் — 00871 — 26

உத்தியோகபூர்வ முடிவுகள் — 24.03.2025 — வெற்றி வாரம் 493 — L 8 8 0 7 4 8 — 86743 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,180,605.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2759 — சீட்டிழுப்பு திகதி 2025.03.24 — தினம் திங்கட்கிழமை — 20 37 52 80 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,884,881.60

சனிதா — திகதி 24.03.2025 — வெற்றி வாரம் 4920 — 12 15 34 36 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,087,996.00 — 64269

ஜயோதா Jayoda — திகதி 2025.03.24 — வெற்றி வாரம் 2114 — 48 51 60 63 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,546,560.40

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4471 — சீட்டிழுப்பு திகதி 24.03.2025 — தினம் திங்கட்கிழமை — 07 08 11 54 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,019,442.40 — 231299

கப்ருக — W 09 49 56 59 74 — 1935 — 24.03.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,585,275.20

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2585 — சீட்டிழுப்பு திகதி 2025.03.24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,475,811.20 — 07 55 71 74 K — 616785
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2531)

076 825 7716 (ஆகாஸ்)

**சிற்றூழியர் தேவை**

யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனமொன்றுக்கு சிற்றூழியர் (பெண்) தேவை.

தொடர்பு : 076 097 3121

**வீடு வாடகைக்கு தேவை**

மூன்று பேர் கொண்ட அரச பணி புரியும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. (3746)

தொடர்புகளுக்கு: 077 604 1412

**பணியாளர்கள் தேவை**

வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலை மற்றும் முதியோர், சிறுவர் பராமரிப்பாளர் (ஆண், பெண் இருபாலரும்) உடனடியாக எமக்கு தேவைப்படுகின்றனர்.
சம்பளம் 45,000 – 55,000 தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். (958)

தொடர்பு : 077 737 2658

# போர்க் குற்றங்களில் ஈடுபட்ட

# சவேந்திர சில்வா, கருணா உட்பட

## 4 பேருக்கு தடை விதித்த ஐக்கிய இராச்சியம்

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் மீது ஐக்கிய இராச்சியம் நேற்று (24) தடைகளை விதித்துள்ளது.



அதன்படி இலங்கையில் உள் நாட்டுப் போரின் போது சட்டவி ரோதக் கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நான்கு நபர்கள் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவில் முன்னாள் இராணுவத் தளபதிகளான ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜய சூரிய மற்றும் முன்னாள் கடற் படைத் தளபதி அட்மிரல் ஒப் த ஃப்ளீட் வசந்த கரன்னா கொட ஆகியோர் அடங்குவர்.

அதேபோல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பணியாற்றிய, விடுதலைப் புலிகளின் கிழக்கு ஆயுதப் பிரிவின் தலைவராக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணா அம்மானும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளார்.


அதன்படி அவர்கள் ஐக்கிய இராச்சியத்திற்கு பயணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அந் நாட்டில் அவர்கள் வைத்திருக்கும் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

**வீடு வாடகைக்கு தேவை**

நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில் மற்றும் யாழ். நகருக்கு அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் தங்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (3740)

தொடர்புகளுக்கு: 077 248 7653

# மரண அறிவித்தல்



பிறப்பு 1949 - 12 - 07

இறப்பு 2025 - 03 - 24

## திரு. செல்லையா கிட்னேஸ்வரன்

(உள்ளக கணக்காய்வு அதிகாரி – இலங்கை போக்குவரத்துச் சபை)

தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கிட்னேஸ்வரன் அவர்கள் நேற்று 24.03.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லாச்சி தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் விமலேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, இராஜநாதன், சிவபாதசுந்தரம், புவனேஸ்வரி, தங்கராசா மற்றும் மகேஸ்வரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் முகுந்தினி(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோண்டாவில்), கஜாநந்தா(Senior quantity surveyor - Australia), டயனி, சர்மியா(இலங்கை வங்கி - நல்லூர்க் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விக்னேஸ்வரன்(வர்த்தகர்), சசிகலா(அவுஸ்திரேலியா), கேதீஸ்வரன் (பிரதி நூலகர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), அஜந்தன் (இலங்கை வங்கி - வட மாகாணக் காரியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சகானா, சாகித்தியா, கபிலன், லக்ஷியா, கரிஜன், ரிஷானி, பிரஜன், ரெஷ்மிதா, கவின்மில்லர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 26.03.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர் (3747)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-2530)

**விற்பனைக்கு**

சாப்பாட்டுக் கடையில் உள்ள பாவனைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு. (3742)

077 629 0894

**வாடகைக்கு தேவை**

மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம் மற்றும் நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் வாகன விற்பனைக்காக கடையொன்று வாடகைக்கு தேவை. (957)

077 919 1529

**விசாக்கான (Show money)**

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு: (907)

075 033 6759

WESTERN UNION MONEY TRANSFER · MoneyGram · DHL · Dialog · Money Master · Ria · aramex

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள், சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமான சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.

ஸ்ரீமுருகன்
SRI MURUGAN (C-2529)

No.303, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 2670 / 5392

**பணியாளர் தேவை**

எமது நிறுவனமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவையாக உள்ளது.

- Waiter - (Room Boy) (3 மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- Bill Clark (3 மொழிகளும் தெரிந்தவர்)

(C-2532)

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 601 6310, 077 243 1310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.[illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.